**பெஷாவர் நகரில் நடத்தப்பட்ட தீவிரவாத தாக்குதலுக்கு பிரதமர் கண்டனம்**

செப்டம்பர் 22, 2013

பெஷாவரில் உள்ள கிறிஸ்தவ தேவாலயத்தில் இன்று நடைபெற்ற பயங்கரமான தற்கொலை தாக்குதல், பயங்கரவாதத்தின் மற்றுமொரு கோரமான வெளிப்பாடு ஆகும். இந்த தாக்குதல் வழிபாட்டுத்தலம் மீது நடத்தப்பட்டுள்ளது. ஏராளமானோரின் உயிரை பலி வாங்கியுள்ளது இந்த விவேகமற்ற வன்முறைச் செயலை மேலும் கோரமாக்கிவிட்டது. இத்தகைய காட்டுமிராண்டித்தனமான செயல் ஒவ்வொரு மதத்தின் கோட்பாடுகளுக்கும் எதிரானது. பெஷாவரில் நடைபெற்ற இந்த பயங்கரவாதத் தாக்குதலை இந்தியா மிகவும் வன்மையாக கண்டிக்கிறது. தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்கள் குடும்பத்தினருக்கு எங்களது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறோம். காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய வேண்டுகிறோம்.

புது தில்லி

செப்டம்பர் 22, 2013